2. தகவல் கோரல்.

எதிர்க்கட்சித் தலைவரின் கார் கே. கே. நகரில் சிலரால் தாக்கப்பெற்றுள்ளது குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதினாலே இந்த நேரத்தை நான் பயன் படுத்திக்கொள்கிறேன். நேற்று காலை நடைபெற்ற உங்களுடைய இல்லத் திருமணத்தில் நான் குறிப்பிட்ட நேரத்தில் கலந்துகொள்ள முடியவில்லை. சட்டமன்றத்திற்கு வரவேண்டிய நிலை வந்துவிட்டது. மாலையில் எப்படியும் கலந்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக மாலை ஆறரை மணிக்கு புறப்பட்டு வழியில் கே. கே. நகரிலே இருக்கிற அன்னை பாத்திமா சைல்டு வெல்பேர் சென்டர் என்ற நிறுவனத்திற்கு சென்று, மதுரை கிழக்கு தொகுதியில் ஒரு அனாதை இல்லம் ஆரம்பிக்கவேண்டும் என்பதற்காக நானும் மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்களும் அரசாங்கத்திலேயிருந்து எனக்கு ஒதுக்கப்பட்ட காரில் கே. கே. நகருக்கு சென்று அந்த இல்லத்தின் உள்ளே போய் பேசிக் கொண்டிருந்த ஒரு ஐந்து நிமிடத்திற்குள்ளாக 7, 8 பேர்கள் கைகளில் ஆயுதங்களோடு வந்து அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த என்னுடைய கார் கண்ணாடிகள் அத்தனையும் உடைத்துவிட்டார்கள். கார் பலத்த சேதத்திற்கு ஆளாகி இருக்கிறது.

இதைக் குறிப்பிடுவதற்கு அடிப்படை காரணம் என்னை நோக்கி தாக்குவதற்காக வந்தார்களா அல்லது வேறு வகையான எண்ணங்களோடு வந்தார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் கே. கே. நகரிலே இருக்கிற காவல் துறை நிலையத்திலே என்னுடைய ஓட்டுநர் அவர்களை வைத்து வண்டிக்காக நான் அங்கு ஒரு புகார் எழுதிக்கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு சின்னசாமி அவர்களும் அந்தப் புகாரை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத்திலே கொண்டு வந்து பாதுகாப்பு என்ற அடிப்படையிலே அல்ல அந்த நிலைமைகள் வளராமல் இருப்பதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நீண்ட நாள் சட்டமன்ற அனுபவம் உள்ளவர்கள். இந்தப் பிரச்சினையை இப்படி எழுப்பவேண்டும் என்று அவர் விரும்பியதே எனக்குச் சற்று ஆச்சரியமாக இருக்கிறது. என்ன காரணம் என்றால் சற்று நேரம் முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள்

இந்தப் பிரச்சினையை சொல்லி, ஓட்டுநர் காவல் நிலைய அலுவலருக்கு எழுதிய புகாரை அந்தத்தாளை என்னிடத்திலே கொடுத்தார்கள். நான் அவர்களிடத்திலே சொன்னேன். இது பற்றி உடனடியாகப் பதில் சொல்லக்கூடிய நிலையிலே நான் இல்லை. காவல் துறையைக் கேட்டுச் சொல்லவேண்டு மானாலும் கூட சபாநாயகர் மூலமாக இந்தக் கடிதம் வருமாறு தாங்களோ அல்லது எதிர்க்கட்சித் தலைவரோ கையெழுத் திட்ட ஒரு புகார் கொடுத்தால், நான் அதை அனுப்பி விவரம் தெரிந்துகொண்டு நாளையதினம் தெரிவிப்பதாகச் சொன்னேன். உறுப்பினர் என்னிடம் பேசுகிறபோது சொன்னார், அந்தப் பகுதியில் ஒரு ரவுடிக் கும்பல் 7, 8 கார்களைச் சேதம் செய்துவிட்டது. எங்களுடைய காரும் சேதம் அடைந்தது நாங்கள் சென்று இருந்த இடத்தில் காரும் பாதிக்கப்பட்டது. என்று சொன்னார்கள். கே.கே. நகர்ப் பகுதியில் அப்படி ஒரு ரவுடி கும்பல் ஒருவர் பெயரைக் கூட அவர் சொன்னார். ஆதாரம் இல்லாமல் அந்தப் பெயரை திரும்பச் சொல்ல நான் விரும்பவில்லை. நான் அரசியல் சம்பந்தப்பட்டதா என்று கேட்டேன். அரசியல் சம்பந்தப்பட்டது அல்ல. அந்தத் தெருவிலே அப்படி ஒரு அக்கிரமம் நடக்கிறது என்ற கருத்தை அவர் சொன்னார். இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லுகிறபோது இரண்டு பக்கத்திலே யும் பொருள் படும்படியாக—அது நாங்கள் எல்லாம் தஞ்சாவூர் மாவட்டத்திலே பேசிப் பழக்கப்பட்டது—(சிரிப்பு) எனவே இரண்டுப் பக்கத்திலேயும் பொருள்படும்படியாக ஒரு கருத்தை சொல்லி அதில் ஏதோ ஒரு உள்நோக்கம் இருப்பது போல் ஒரு எண்ணம் ஏற்படுத்துவது அவ்வளவு சரியல்ல. ஆனால் இந்த செய்தி இந்த அவையில் தெரிவிக்காமலே, தெரிவித்தாலும் கூட உரிய முறையில் விசாரிக்க காவல் துறை கேட்டுக்கொள்ளப்படும். அந்த முறையில் காவல் துறையைக் கேட்டுக்கொள்வேன்.

10-10 மணி

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நான் இதைப் பிரச்சினையாக எழுப்பி விவாதிக்க வேண்டும் என்று விரும்பவில்லை. நான் எதற்காக விவா திக்க வேண்டும் என்று எழுப்பினேன் என்றால் நேற்றைக்கு இந்தக் காவல் துறையிலே எதிர்க்கட்சித் தலைவருடைய கார் அடிக்கப்பட்டது, கண்ணாடி உடைக்கப்பட்டது என்று காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் காவல் துறையில் இருக்கின்றவர்கள் கொஞ்சமாவது அக்கறை உள்ளவர் களாக இருந்து இருப்பார்களானால் தகவலை உங்களுக்குத் தந்து இருக்கவேண்டும், முன்னவருக்கும் கொடுத்து இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதைப்பற்றி யார் கார் போனால் என்ன, யார் உயிர் போனாலும் அவர்களுக்கு கவலையில்லை என்ற நிலையில் இருக்கிறார்கள். அதை நீங்கள் கவனிக்கவேண்டும் என்பதால் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

1990 ஏப்ரல் 5]

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்காரவேண்டும். ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். நான் ஏற்கனவே நிறைய விரிவான விளக்கங்கள் எல்லாம் சொல்லியிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் சொன்ன கருத்தைக் கவனத்தில் வைத்துச் செயல்படுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு). திரு. குமரி அனந்தன் அவர்கள் உட்கார வேண்டும். இப்படி இருந்தால் நான் கடைசியில் இறுக்கமாக இருக்க வேண்டியிருக்கும். கொஞ்சம் வாய்ப்புக் கொடுத்தால், அப்புறம் என்ன ஆகிவிடும் என்றால், வீணாகி விடும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆர். இராதா, கே. ஏ. செங்கோட்டையன், வி. கே. சின்னசாமி, வே. நா. சுப்பிரமணியன், எஸ். டி. உகம்சந்த் , வே. பெரியசாமி, க. பொன்னுசாமி, குமரி அனந்தன், கே. ரமணி, கோ. வீரையன், உ. ரா. வரதராசன் மற்றும் சோ. அழகர்சாமி ஆகியோர் ''தமிழகத்திலுள்ள வருவாய்த் துறை அதிகாரிகள் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்ற பொருள் குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21 ஆம் தேதி முதல் தமிழ் நாட்டில் இருக்கிற 15 ஆயிரம் வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்காக முன்னறிவிப்புக் கொடுத்து நீண்ட நாட்களாக அவர்களுடைய கோரிக்கை என்ன என்பதை தெளிவாக அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இது குறித்து 2, 3 முறை பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதாகவும், அந்தப் பேச்சு வார்த்தையில் முடிவுகள் ஏற்படாத காரணத்தால் தங்களுக்கு வேறு வழி இல்லை என்ற நிலை ஏற்பட்டதற்குப் பின்னால் அவர்களுக்கு இருக்கிற அந்த உரிமையின் அடிப்படையில் வேலை நிறுத்தம் தவிர வேறு வழி இல்லாத நிலையில் வேலை நிறுத்